DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEEDINGS)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, DHARAPURAM

SESSIONS CASE NO: 99/18

Name : கதிரவன் Deposition of Witness for : P.W. 1

Father's Name : அகிலன் Caste :

Age : Calling :

Village : Taluk :

District :

Solemnly affirmed according with the provisions of Act XX of 1973 on the day of 25.11.19.

முதல்விசாரணை

சத்தியமாக சொல்கிறேன். நான் தற்போது சிலைகடத்தல் தடுப்பு பிரிவில் காவல் துணைக்கண்காணிப்பாளராக பணியில் உள்ளேன். இந்த வழக்கு சம்பவ சமயத்தில் காங்கேயம் மதுவிலக்கு அமல் பிரிவில் நான் ஆய்வாளராக பணியில் இருந்தேன். கடந்த 11.10.13 ம் தேதி அன்று பகல் சுமார் 14 மணியளவில் நானும் என்னுடைய உதவி ஆய்வாளர்கள் காந்திமதி கோமதி செல்வகுமார் ஆகியோருடன் வெள்ளகோவில் காவல்நிலைய சரகம் காங்கேயம் டூ கோவை ரோடு ரிலையன்ஸ் பெட்ரோல் பங்க் அருகில் குட்டகாடு என்ற பிரிவில் வாகன தணிக்கை செய்து கொண்டிருந்த போது மேற்கிருந்து கிழக்கு நோக்கி வந்த டாடா சுமோ டிஎன் 09 எக்ஸ் 7729 என்ற வாகனத்தை சந்தேகத்தின் பேரில் நிறுத்தி விசாரணை செய்ததில் வாகனத்தின் ஓட்டுனர் மணிகண்டன் த/பெ.பாண்டி முன்னுக்கு பின் முரணாக பதில் சொன்னதால் வாகனத்தை சோதனை செய்தோம். அப்போது அந்த வாகனத்தின் பின் சீட்டில் வெள்ளை நிற பிளாஸ்டிக் கேன் இருந்ததை திறந்து முகர்ந்து பார்த்ததில் அது சாராயம் என தெரியவந்தது. அது சாராயம் என்பது எனது பணி அனுபவத்தின் மூலம் தெரிய வந்தது. வாகனத்தின் பிற பகுதிகளிலும் நாங்கள் சோதனை செய்தோம். அப்போது மேற்படி வாகனத்தின் சீட்டுக்கு அடியில் சேர்மன் பைன் பிராண்டிங் என்ற லேபிள் கட்டுகள் 3 இருந்தது. எனவே நாங்கள் சந்தேகப்பட்டு மேற்சொன்ன மணிகண்டனை விசாரித்த போது அவர் ஒரு வாக்குமூலம் கொடுத்தார். அதை நான் பதிவு செய்தேன். அதில் அவர் குட்டகாட்டை சேர்ந்த காளியப்பன் என்பவர் பழைய நூல் வேஸ்ட்டுகளை போட்டு வைக்கும் கோடவுன் குட்டகாட்டில் வைத்திருப்பதாகவும் அந்த கோடவுனில் குளித்தலையை சேர்ந்த சுரேஸ் என்பவர் சில நபர்களை வேலையாட்களாக வைத்து போலி மதுபானம் தயாரிப்பதற்கு தேவையான பொருட்கள் அனைத்தையும் அந்த கோடவுனில் வைத்திருப்பதாகவும் வெளியிடங்களில் இருந்து திருடி வரப்பட்ட வாகனங்களையும் வைத்திருப்பதாகவும் காலி வெள்ளை நிற கேன்கள் சுமார் 600 அளவில் வைத்திருப்பதாகவும்

காலிபாட்டில் மூடிகள் மற்றும் பாட்டில்களை அடைப்பதற்கான பஞ்சிங் மெசின் மற்றும் போலி லேபிள்கள் காலி தண்ணீர் கேன்கள் ஆகியவை வைத்திருப்பதாகவும் தான் ஓட்டுனர் என்பதால் வாகனம் மூலம் சரக்குகளை ஏற்றிக் கொண்டு வந்து கொடுக்கும் வேலை செய்ததாகவும் மேற்படி வண்டியில் இருந்த பொருட்கள் மேற்படி சுரேஸ் என்பவருக்கு சொந்தமானது என்றும் மற்ற விவரங்கள் அனைத்தும் சுரேஸ்க்கு தான் தெரியும் என்றும் தன்னை அழைத்து சென்றால் மேற்படி கோடவுனையும் அங்கு பணிபுரியும் ஆட்களையும் அங்குள்ள பொருட்களையும் காட்டமுடியும் என்று சொன்னார். மேற்படி வாக்குமூலத்தை பதிவு செய்த பிறகு அன்றைய தினம் 14.30 மணியளவில் சாட்சிகள் உதவி ஆய்வாளர் கோமதி மற்றும் முதல் நிலை காவலர் செல்வகுமார் ஆகியோர் முன்னிலையில் மேற்படி மணிகண்டன் ஓட்டி வந்த டிஎன் 09 எக்ஸ் 7729 என்ற எண்ணுள்ள டாடா சுமோ வாகனத்தையும் சேர்மன் பிராந்தி லேபிள்கள் 3 கட்டுகள் வெள்ளை கேனில் இருந்த விஷ நெடியுடன் கூடிய எரிசாராயம் ஆகியவற்றை ஒரு மகஜர் எழுதி கைப்பற்றினேன். அந்த மகஜர் அசாஆ.1. பின்னர் மேற்படி மணிகண்டன் மற்றும் கைப்பற்றிய சொத்துகளுடன் அன்றைய தினமே 15.45 மணியளவில் குடோவுனுக்கு சென்று மேற்படி குடோவுனை போலீஸ்பார்ட்டி உதவியோடு சுற்றி வளைத்தேன். அந்த குடோவுனில் இருந்த பின்பக்க வழியாக சுமார் 6 நபர்கள் தப்பி ஓடிவிட்டார்கள். சாட்சி தற்போது 7 பேர் எனக் கூறுகிறார். அங்கிருந்த காளியப்பன் என்பவரை நாங்கள் பிடித்துக் கொண்டோம். அவர்தான் அந்த இடத்தின் உரிமையாளர் ஆவார். மணிகண்டன் அவரை அடையாளம் காட்ட காளியப்பனை கைது செய்து அவரிடம் விசாரிக்க அவர் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். பின்னர் 16.15 மணியளவில் சுமார் 35 லிட்டர் பிடிக்கக்கூடிய வெள்ளை நிற கேனில் சுமார் 10 லிட்டர் அளவிற்கு இருந்த எரிசாராயம்

மூடியுடன் இருந்த தகர காலி ட்ரம்

காலி பாட்டில் மூடிகள் 2 மூட்டை

சுமார் 180 மிலி பிடிக்கக்கூடிய பெட் பாட்டில்கள் மற்றும் 375 மிலி பிடிக்கக்கூடிய பெட் பாட்டில்கள் அடங்கிய அட்டை பெட்டிகள் 35 எண்ணிக்கை

700 மிலி அளவுள்ள பசை பாட்டில்கள் 10 எண்ணிக்கை

டைப் 1 பிளாஸ்டிக் கார்மல் என லேபிள் ஒட்டப்பட்ட சுமார் 1 கிலோ அளவுள்ள பாட்டில்கள் 10 எண்ணிக்கை

காக்நெட் பிராந்தி என்ற லேபிளுடன் சுமார் 1/2 லிட்டர் பிடிக்கக்கூடிய பாட்டில் 1 எண்ணிக்கை

சுமார் 50 லிட்டர் பிடிக்கக்கூடிய கருப்புநிற பிளாஸ்டிக் காலிகேன்கள் 9 எண்ணிக்கை

சுமார் 35 லிட்டர் பிடிக்கக்கூடிய கருப்பு மற்றும் வெள்ளை நிற பிளாஸ்டிக் காலிகேன்கள் 200 எண்ணிக்கை

பாட்டில்களை சீல் செய்ய பயன்படுத்தும் பஞ்சிங் மெசின் மோட்டார் உடன் இணைந்தது 1 எண்ணிக்கை

வாகனங்களுக்கான டூப்ளிகேட் நம்பர் பிளேட்டுகள் 5 எண்ணிக்கை ( அவையாவன

டிஎன் 64 ஜெ 1407 (2 எண்ணிக்கை) டிஎன் 45 எக்ஸ் 7227 (1 எண்ணிக்கை)

டிஎன் 38 எகே 6430 (2 எண்ணிக்கை) டிஎன் 39 எஜெ 2346 (2 எண்ணிக்கை ) டிஎன் 01 எகே 1148 ( 1 எண்ணிக்கை)

ஓல்டுமங்க் டீலக்ஸ் ரம் 180 மிலி ஆர்எஸ் 60 என்று அச்சிடப்பட்ட லேபிள்கள் 28 கட்டுகள் (ஒரு கட்டுக்கு 2000 லேபிள்கள் உள்ளது)

கேப்டன் பிராந்தி 180 மிலி ஆர்எஸ் 75 என்று அச்சிடப்பட்ட லேபிள்கள் 41 கட்டுகள் (ஒரு கட்டில் 2000 லேபிள்கள் உள்ளது)

கீரின் மேஜிக் 180 மிலி ஆர்எஸ் 70 என அச்சிடப்பட்ட லேபிள்கள் 41 கட்டுகள் (ஒரு கட்டில் 2000 லேபிள்கள் உள்ளது)

ஓல்டுமங்க் டீலக்ஸ் ரம் 750 மிலி என்று அச்சிடப்பட்ட லேபிள்கள் 3 கட்டுகள் (ஒரு கட்டுக்கு 2000 லேபிள்கள் உள்ளது)

எக்சைஸ் லேபிள்கள் ஹாலோகிராம் பதிவுடன் 20000 வீதம் 2 ரோல்கள்

காம்பவுண்டுக்குள் நின்றிருந்த பிஒய் 01 எஎப் 9222 என்ற எண்ணுள்ள வெள்ளை நிற ஆம்னி பஸ் 1 அதனை சோதனை செய்தபோது 35 லிட்டர் பிடிக்கக்கூடிய வெள்ளை நிற கேன்கள் 3 ல் தலா 10 லிட்டர் அளவிற்கு விஷ நெடியுடன் கூடிய எரிசாராயம் இருந்தது..

கேப்ஸ் பெட் பாட்டில்கள் 180 மிலி மற்றும் 750 மிலி அளவுள்ளது அடங்கிய 4 பெட்டிகள் அதற்கான மூடிகள் 1 மூட்டை டிஎன் 39 எஎம் 3399 என்ற எண்ணுள்ள காபிகலர் பொலிரோ கார் 1 அதன் பின் சீட்டில் 35 லிட்டர் பிடிக்கக்கூடிய வெள்ளைநிற பிளாஸ்டிக் கேனில் 10 லிட்டர் அளவிற்கு எரிசாராயம் மேலும் அதில் 3 காலி கேன்கள் ஓல்டுமங்க் டீலக்ஸ் ரம் 750 மிலி என அச்சிடப்பட்ட லேபிள்கள் 3 கட்டுகள் (ஒரு கட்டில் 2000 லேபிள்கள் உள்ளது)டிஎன் 39 எஎம் 0550 டாடா சபாரி வண்டி 1

அதன் பின்சீட்டில் 35 லிட்டர் பிடிக்கக்கூடிய வெள்ளைநிற பிளாஸ்டிக் கேனில் 10 லிட்டர் அளவிற்கு எரிசாராயம் 1 மேலும் அதில் 3 காலி கேன்கள் மற்றும் பாட்டில் மூடிகள் 1 மூட்டை மானிட்டர் பிராந்தி என அச்சிடப்பட்ட லேபிள்கள் 3 கட்டுகள் (ஒரு கட்டில் 2000 லேபிள்கள் உள்ளது )

ஓல்டு சீக்ரெட் 180 மிலி என அச்சிடப்பட்ட லேபிள்கள் 10 கட்டுகள் ஒரு கட்டில் 2000 லேபிள்கள் உள்ளது.

டிஎன் 45 எசி 8674 என்ற பதிவெண் உள்ள போர்ஸ் குருசியஸ் ஜீப் 1 அதனை சோதனை செய்ததில் அதிலும் 35 லிட்டர் பிடிக்கக்கூடிய வெள்ளைநிற பிளாஸ்டிக் கேனில் 10 லிட்டர் அளவிற்கு எரிசாராயம் மேலும் அதில் வெள்ளை நிற 4 காலி கேன்கள் கீரின் மேஜிக் 750 மிலி என அச்சிடப்பட்ட லேபிள்கள் 10 கட்டுகள் (ஒரு கட்டில் 2000 லேபிள்கள் உள்ளது) ஹாலோகிராம் 2 கட்டு (ஒரு கட்டில் 2000 லேபிள்கள் உள்ளது)

டிஎன் 33 எடி 1249 என்ற எண்ணுள்ள யமஹா ஆர்எஸ் 135 என்ற இருசக்கர வாகனம் 1

அதன் டேங்க் கவரில் க்ரீன் மேஜிக் பிராந்தி 750 மிலி பிடிக்கக்கூடிய பாட்டிலில் 75 மிலி தயாரிக்கப்பட்ட போலி மதுபானம் மற்றும் ஆண்டவர் என லேபிள் ஒட்டப்பட்ட பாட்டிலில் 2 லிட்டர் அளவிற்கு போலி மதுபானம் டிஎன் 45 ஆர் 5889 என்ற எண்ணுள்ள ஹீரோஹாண்டா வண்டியில்

இருந்த கட்டை பையில் கிளாசிக் பிராந்தி 741 என்ற லேபிள் ஒட்டப்பட்ட 5 லிட்டர் பிடிக்கக்கூடிய வெள்ளைநிறகேன் அதில் 5 லிட்டர் அளவிற்கு போலி திரவம் இன்னொரு 1 லிட்டர் பிளாஸ்டிக் பாட்டிலில் 1 லிட்டர் அளவிற்கு போலி திரவம் 20 லிட்டர் பிடிக்கக்கூடிய மினரல் வாட்டர் கேன்கள் 25 எண்ணிக்கை கைப்பற்றப்பட்ட எரிசாராயம் அனைத்தையும் சுமார் 375 மிலி பிடிக்கக்கூடிய பாட்டில்களில் 350 மிலி அளவிற்கு ஒவ்வொரு கேனில் இருந்தும் மாதிரி எடுத்து தனித்தனியே மூடி சீல் வைத்து குறியீடு கொடுக்கப்பட்டது. குட்டகாடு பிரிவில் மணிகண்டனை பிடித்த போதும் அவர் வைத்திருந்த எரிசாராயத்திலிருந்து அதே போன்று சுமார் 375 மிலி பிடிக்கக்கூடிய பாட்டில்களில் 350 மிலி அளவிற்கு மாதிரி எடுத்து அப்போதும் மூடி சீல் வைக்கப்பட்டது. அந்த பாட்டில்களுக்கு எ 1 எ 2 என்றும் குடோவுனில் கைப்பற்றப்பட்ட எரிசாராயங்களில் இருந்து எடுக்கப்பட்ட மாதிரிக்கு பி1 லிருந்து எப் 2 குறியீடு வழங்கப்பட்டது . கைப்பற்றப்பட்ட பொருட்களுக்கு காவலர்களை நியமித்து காவல் வைத்து விட்டு அன்றைய தினமே அத்திகாட்டு தோட்டம் என்ற இடத்தில் வைத்து பொன்னாத்தாள் என்பவரை அன்று இரவு 7 மணியளவில் கைது செய்தோம். பின்னர் 19.00 மணியளவில் பொன்மணி என்ற பொன்னாத்தாள் கொடுத்த வாக்குமூலத்தின் அடிப்படையில் அவர் இருந்த தோட்டத்தில் இருந்த வீட்டில் வைத்து 35 லிட்டர் பிடிக்கக்கூடிய வெள்ளை நிற கேனில் சுமார் 10 லிட்டர் அளவிற்கு இருந்த எரிசாராயத்தை மேற்படி எதிரி அடையாளம் காட்ட கைப்பற்றினோம். மேலும் அங்கிருந்த தகர ட்ரம் 2 சேர்மன் பைன் பிராந்தி என்று அச்சிடப்பட்ட லேபிகள் 3 கட்டுகள் (ஒரு கட்டில் 2000 லேபிள்கள்) 20000 உள்ள ஹாலோ கிராம்கள் 2 கட்டுகள் சுஸ்தீக் கேப்ஸ் பெட் பாட்டில் 180 மிலி மற்றும் 750 மிலி அதில் 8576 என அச்சிடப்பட்ட 20 அட்டை பெட்டிகளில் காலி பாட்டில்கள் இருந்தது. பாட்டில் மூடிகள் 1 மூட்டை டைப் 1 பிளாஸ்டிக் காஸ்டிக் கேரமல் என்ற லேபிள் ஒட்டப்பட்ட 1 கிலோ அளவில் ரசாயன திரவம் அடங்கிய 15 பாட்டில்கள் .

மேற்படி பொருட்களை மகஜர் எழுதி 19.45 மணிக்கு கைப்பற்றினேன். காளியப்பன் குடோனில் இருந்து மேற்சொன்ன பொருட்களை கைப்பற்றியதற்காக எழுதப்பட்ட கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ 2. பொன்னாத்தாள் என்கிற பொன்மணி என்பவரது தோட்டத்தில் வைத்து அவரிடமிருந்து கைப்பற்றிய பொருட்களை கைப்பற்றியதற்கான கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ 3. பின்னர் கைப்பற்றிய சொத்துக்கள் மற்றும் எதிரிகளுடன் காங்கயம் மதுவிலக்கு அமல்பிரிவு காவல்நிலையம் சென்று 00.30 மணிக்கு ஆண் எதிரிகளை ஆண் காவலர் பாரா வசமும், பெண் எதிரியை உதவி ஆய்வாளர் காந்திமதி வசமும் பாராவில் ஒப்படைத்து பின்னர் 12.10.2013 அன்று காலை 6.30 மணியளவில் குட்டக்காடு கிராம நிர்வாக அதிகாரி திரு., மோகன்ராஜ் மற்றும் அவரது உதவியாளர் செந்தில்ராஜ் ஆகியோர் முன்னிலையில் மணிகண்டனை பிடித்த இடத்தை நான் மீண்டும் ஒருமுறை பார்வையிட்டேன். பின்னர் அதே சாட்சிகளுடன் காளியப்பன் குடோனுக்கு மீண்டும் சென்று ஒரு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயாரித்தேன். அந்த மாதிரி வரைபடம் அ.சா.ஆ 4 பின்னர் மேற்படி அதே சாட்சிகளுடன் காலை 7.45 மணியளவில் பொன்மணி என்ற பொன்னாத்தாள் தோட்டத்திற்கு சென்று அங்கு பொருட்களை கைப்பற்றிய இடத்தை

மீண்டும் பார்வையிட்டு ஒரு மாதிரி வரைபடம் தயாரித்தேன். அது அ.சா.ஆ 5. பின்னர் மேற்படி ஆய்வின்போது என்னுடன் வந்த உதவி ஆய்வாளர் கோமதி, உதவி ஆய்வாளர் காந்திமதி, முதல்நிலை காவலர் செல்வகுமார், கிராம நிர்வாக அதிகாரி மற்றும் அவரது உதவியாளர் ஆகியோரை தனித்தனியே விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். 12.10.2013 ம் தேதி மேற்சொன்ன எதிரிகளையும் படிவம் 95 ன் மூலம் கைப்பற்றப்பட்ட சொத்துக்களையும் காங்கயம் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு தக்க வழிக்காவல் மூலம் அனுப்பி வைத்தேன். எதிரி காளியப்பன் ஒப்புதல் வாக்குமூலத்தில் வேலக்கோட்டையை சேர்ந்த ராமச்சந்திரன் என்பவர் இந்தக் குற்றத்தில் சம்பந்தப்பட்டுள்ளது தெரியவந்ததாலும் அவர் அப்போது நாமக்கல்லில் நடந்த வழக்கில் கைது செய்யப்பட்டு ஆத்தூர் கிளை சிறைச்சாலையில் இருப்பது தெரியவந்தததாலும் அவரை இந்த வழக்கில் ஆஜர்படுத்த 18.10.2013 ம் தேதி பி.டி வாரண்ட் பெற நீதிமன்றத்தில் மனு செய்தேன். அதன்படி உத்தரவு பெற்று 19.10.2013 ம் தேதி சம்பிரதாயக் கைது செய்து மேற்படி ராமச்சந்திரனை காங்கயம் குற்றவியல் நீதித்துறை நடுவர் முன்னிலையில் ஆஜர்படுத்தினேன். பின்னர் இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட இன்னும் இரண்டு நபர்களான பூபதி மற்றும் சரவணக்குமார் ஆகியோர் 17.10.2013 ம் தேதி தஞ்சாவூர் ஜே.எம் 1 நீதிமன்றத்தில் சரணடைந்திருந்தது தெரியவந்ததால் அவர்களை போலீஸ் காவலில் எடுத்து விசாரிக்க மனு செய்து அனுமதி பெற்று 22.10.2013 ம் தேதி மேற்படி நபர்களை போலீஸ் காவலில் எடுத்து விசாரித்தேன். அப்போது மேற்படி இருவரும் தனித்தனியாக ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார்கள். அதை தனித்தனியே பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் கோயமுத்தூர் டு திருப்பூர் ரோட்டில் உள்ள அகஸ்திலிங்கம் பாளையம் ஆர்.எஸ் மில் குடோனில் இருந்து எதிரி சுரேஷின் அறிவுரையில் போலி மதுபானம் தயாரிக்க வைத்திருந்த நான்கு 35 லிட்டர் பிடிக்கக்கூடிய பிளாஸ்டிக் கேன்களில் தலா 10 லி வீதம் விஷ நெடியுடன் கூடிய எரிசாராயத்தை இரண்டு எதிரிகளும் அடையாளம் காட்ட சாட்சிகளான கிராம நிர்வாக அதிகாரி வேணுகோபால் அவரது உதவியாளர் தங்கமுத்து ஆகியோர் முன்னிலையில் காலை 11.30 மணியளவில் மகஜரில் கைப்பற்றினேன். அப்போதே கேரமல் எசன்ஸ் 1 கி பாட்டில் 5 எண்ணிக்கை, ஸ்டிக்கர் ரோல் 1 எண்ணிக்கை , ஸ்டிக்கர் ரோல் கட்டு 50 கட்டுகள் (1 கட்டுக்கு 100 எண்ணிக்கை) , மில்லினியம் வெண்ணிலா 500 மி.லி பாட்டில்கள் 3 எண்ணிக்கை, கேமல் கம் பாட்டில்கள் 10 எண்ணிக்கை, காலி தண்ணீர் பாட்டில்கள் 10 எண்ணிக்கை, சுமார் 35 லி பிடிக்கக்கூடிய வெள்ளை நிற காலி கேன்கள் 30 எண்ணிக்கை, 50 லி பிடிக்கக்கூடிய நீல நிற பிளாஸ்டிக் கேன்கள் 20 எண்ணிக்கை, 180 மி.லி பிடிக்கக்கூடிய காலி மதுபான பாட்டில்கள் 576 எண்ணிக்கை அடங்கிய அட்டைபெட்டிகள் இரண்டு, கிரீன் மேஜிக் பிராந்தி 180 மி,லி என்று அச்சிடப்பட்ட லேபிள்கள் 16 கட்டுகள் (1 கட்டில் 2000 எண்ணிக்கை), கிரீன் மேஜிக் பிராந்தி 750 மி.லி என அச்சிடப்பட்ட லேபிள் 1 கட்டு (2000 எண்ணிக்கை) , மானிட்டர் டீலக்ஸ் பிராந்தி 180 மி.லி என அச்சிடப்பட்ட லேபிள்கள் 2 கட்டுகள் ( ஒரு கட்டில் 2000 எண்ணிக்கை) ஆகியவற்றை மேற்படி சாட்சிகள் முன்னிலையில் மகஜரில் கைப்பற்றினேன். அந்த மகஜர் அ.சா.ஆ 6. பின்னர் அன்றைய தினமே காலை 10.00 மணியளவில் ஆர்.எஸ் மில் குடோன் சம்பவ இடத்தை பார்த்து மேற்படி

சாட்சிகள் வேணுகோபால் மற்றும் தங்கமுத்து ஆகியோர் முன்னிலையில் பார்வைமகஜர் மற்றும் மாதிரிவரைபடம் தயாரித்தேன். அந்த மாதிரிவரைபடம் அ.சா.ஆ 7. எதிரிகள் மற்றும் சொத்துக்களுடன் காவல்நிலையம் வந்து படிவம் 95ன் மூலம் கைப்பற்றிய சொத்துக்களையும் போலீஸ் காவல் முடித்து எதிரிகளை 25.10.2013 ம் தேதி மீண்டும் நீதிமன்ற காவலுக்கும், அனுப்ப ஆஜர் படுத்தினேன். காளியப்பன் என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் இந்த குற்றவழக்கில் செவ்வந்து, க/பெ ராமன் என்பவர் சம்பந்தப்பட்டுள்ளது தெரியவந்தது. அவரைத் தேடியபோது வெள்ளகோவில் பேருந்துநிலையத்தில் இருப்பதை கண்டு 25.10.2013ம் தேதி பிற்பகல் 3.00 மணியளவில் மேற்படி செவ்வந்து என்பவரை கைது செய்து அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் மலைப்பாளையம் பொன்மணி என்பவர் வீட்டிற்கு பின்புறம் உள்ள புதரில் போலி மதுபானம் தயாரிக்க சுரேஷ் கொடுத்த அறிவுரையின் பேரில் காலி கேன்கள், லேபிள்கள், வெண்ணிலா எசன்ஸ், காலி தண்ணீர் பாட்டில்கள், லேபிள்கள், ஆகியவை மறைத்து வைத்திருப்பதாகவும் அழைத்துச் சென்றால் எடுத்து ஆஜர் செய்யமுடியும் என்றும் சொன்னதால் அவரை சாட்சிகள் காந்திமதி மற்றும் கோமதி ஆகிய உதவி ஆய்வாளர்களுடன் பிற்பகல் 5.00 மணியளவில் அழைத்து சென்று மேற்படி செவ்வந்து அடையாளம் காட்டிய வெள்ளை நிற பிளாஸ்டிக் கேன்கள் சுமார் 35 லி பிடிக்கக்கூடியது தலா 10 லி எரிசாராயத்துடன் இருந்தது (இரண்டு எண்ணிக்கை) , 35 லி பிடிக்கக்கூடிய வெள்ளை மற்றும் நீல நிற காலி கேன்கள் இரண்டு, 180 மி.லி பிடிக்கக்கூடிய காலி பாட்டில்கள் 96 எண்ணிக்கை, டைப் 1 பிளாஸ்டிக் கேரமல் என அச்சிடப்பட்ட லேபிள்கள் மற்றும் 1 கிலோ பாட்டில்கள் 750 மி.லி கேமல் பசை பாட்டில்கள் 3 எண்ணிக்கை, ஸ்டிக்கர் ரோல் கட்டு 10 கட்டுகள் தலா 100 எண்ணிக்கை கொண்டவை, மில்லினியம் வெண்ணிலா எசன்ஸ் தலா 500 மி.லி பாட்டில்கள் இரண்டு, 20 லி காலி தண்ணீர் கேன்கள் 9 எண்ணிக்கை, 180 மி.லி கிரீன் லேபிள் என அச்சிடப்பட்ட லேபிள்கள் 5 கட்டுகள் ( 1 கட்டில் 2000 வீதம்), மானிட்டர் டீலக்ஸ் பிராந்தி 180 மி.லி என அச்சிடப்பட்ட லேபிள்கள் 1 கட்டு (2000 எண்ணிக்கை), காலி அட்டை பெட்டிகள் 10 எண்ணிக்கை, ஆகியவற்றை மகஜர் எழுதி மேற்சொன்ன சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றினேன். அந்த மகஜர் அ.சா.ஆ 8. பின்னர் எதிரி மற்றும் வழக்கு சொத்துக்களுடன் காவல்நிலையம் வந்து எதிரியை பெண் காவலர் பாரா வசம் ஒப்படைத்தேன். வழக்கு சொத்துக்களை படிவம் 95 ல் எழுதி எதிரி மற்றும் வழக்கு சொத்துக்களை நீதிமன்றக் காவலுக்கு அனுப்பிவைத்தேன். எதிரி ராமச்சந்திரன் என்பவரை போலீஸ் காவலில் எடுத்து விசாரிக்க மனுக்கொடுத்திருந்தேன். அந்த மனு 31.10.2013 ம் தேதி அனுமதிக்கப்பட்டது. அதன்படி அன்றைய தினமே அவரை போலீஸ் காவலில் எடுத்து விசாரித்தேன். அப்போது எதிரி சாட்சிகள் வேணுகோபால், தங்கமுத்து ஆகியோர் முன்னிலையில் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அதில் சுரேஷ் என்பவர்தான் முதலாளி என்றும் மற்ற எதிரிகள் அவரது பணியாட்கள் என்றும் கூறினார். அவரை விசாரணை முடித்து அன்றைய தினமே நீதிமன்றக் காவலுக்கு அனுப்பிவைத்தேன். கைப்பற்றப்பட்ட எரிசாராயங்களிலிருந்து எடுக்கப்பட்ட மாதிரிகளுக்கு ஏற்கனவே ஏ.1 முதல் ட்டி 4 ஆன எண்ணிடப்பட்டிருந்தவைகளை நீதிமன்றம் மூலம்

மனுசெய்து ஆய்வுக்காக கோவை மண்டல தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பி வைத்தேன். அதற்கு 8.11.2013 ம் தேதி ரசீது பெற்றுக்கொண்டேன். மேற்படி தடயங்களுக்கான ஆய்வறிக்கையை 10.11.2013 ம் தேதி கிடைக்கப்பெற்றேன். பின்னர் மறுநாள் அறிவியல் அலுவலர் திரு.விஜயகுமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இந்த நிலையில் நான் பணிமாறுதல் செய்யப்பட்டதால் எனக்குப் பின்னால் வந்த ஆய்வாளரிடம் வழக்கு கோப்பை ஒப்படைத்தேன்.

(முதல்விசாரணை தொடர்ச்சிக்காக விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.)